செய்தி வெளியீடு எண்.179 **நாள்: 15.12.2021**

பத்திரிகை செய்தி

2021–2022ஆம் கல்வியாண்டிற்கான ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் செயல்படுத்தப்படும் மத்திய அரசு நிதி ஆதரவிலான போஸ்ட் மெட்ரிக் (10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட அனைத்து படிப்புகளும்) கல்வி உதவித்தொகை திட்டம் மற்றும் ப்ரிமெட்ரிக் (ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகள்) ஆகிய திட்டங்களுக்குரிய இணையதளம் 13.12.2021 அன்று திறக்கப்பட்டது. மேற்கண்ட திட்டங்களின் கீழ் பயன்பெற தகுதி வாய்ந்த பழங்குடியினர் நல மாணாக்கர்களிடமிருந்து புதிய மற்றும் புதுப்பித்தல் கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களைப் பெற்று மாணாக்கர்களுடைய கல்வி உதவித்தொகை விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து, சாதிச்சான்று, வருமானச் சான்று, மதிப்பெண் சான்று, சேமிப்பு கணக்கு புத்தக நகல், ஆதார் எண் உள்ளிட்ட பிற ஆவணங்களுடன் 13.01.2022–ற்குள் கல்வி இணையதள வழி **(escholarship.tn.gov.in)** விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.விஜயா ராணி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
சென்னை மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
சென்னை–01.